தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**தீவிர தண்ணீர் பயிற்சி முகாம்**

மத்திய நிலத்தடி நீர் வாரியம், தென்கிழக்கு கடலோர மண்டலம் சென்னை தீவிர தண்ணீர் இயக்க பயிற்சியை 29-2-2016 (இன்று) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நீர் தொழில்நுட்ப மையத்தில் தொடங்கியது.

இந்திய அரசு நீர் வளங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகம் 2015-16 ஆம் ஆண்டில் ‘‘ஜல்கிராந்தி அபியான்’’ திட்டத்தை அறிவித்துள்ளது. தமிழில் இதை தீவிர தண்ணீர் இயக்கம் அல்லது நீர் புரட்சிகர பிரசாரம் என பொருள் கொள்ளலாம்.

நாட்டில் உள்ள நீர் பயன்படுத்துவோர் அனைவரையும் ஒன்றுபடுத்தி நீர் பாதுகாப்பு மற்றும் மேலண்மையில் முழுமையாக பங்கு பெறச் செய்து, இதை ஒரு மக்கள் இயக்கமாக செய்வதே இதன் நோக்கமாகும். ‘‘தீவிர தண்ணீர் இயக்கம்’’ என்ற ‘‘ஜல்கிராந்தி அபியான்’’ நாடு முழுவதும் ஜுன் 5, 2015 அன்று துவக்கப்பட்டது.

சென்னை மத்திய நிலத்தடி நீர் வாரிய தலைமை அதிகாரி திரு. அ. சுப்புராஜ் அவர்கள் இத்திட்டம் துவக்கப்பட காரணங்கள் என பெருகி வரும் மக்கட்தொகையும், நாட்டின் தனி மனிதருக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் அளவு ஆண்டு தோறும் குறைந்து கொண்டே இருப்பதையும் குறிப்பிட்டார். தண்ணீரின் முக்கியத்துவம் பற்றி இந்த நேரத்தில் எடுத்துரைக்காவிடில் எதிர்காலத்தில் நீர் பயனீட்டாளர்கள் இடையே தகராறுகளும், ஆறுகளின் வடிநிலப்பகுதிகள் உள்ள மாநிலங்களிடையே பிரச்சினைகளும் ஏற்படலாம். எனவே நீர் பாதுகாப்பு, நீர் பயன்பாடு, நீர் தேவை மேலாண்மை ஆகியவற்றில் நாட்டில் அனைவரும் முழுமையாக இணைந்து செயலாற்றுவது காலத்தின் கட்டாயமாகிறது என்று கூறினார்.

கோயம்புத்தூர் மத்திய நீர் ஆணைய முதன்மை பொறியாளர் திரு. ஜெ. சந்திரசேகர் அவர்கள்இத்திட்டத்தின் நோக்கமானது அனைத்து பயனாளிகளான, விவசாயப் பெருங்குடி மக்கள், பயனீட்டாளர்கள், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் உள்ளாட்சி அமைப்புகள், பொதுமக்கள், மாணவர்கள் என அனைவரும் இணைந்து பங்கேற்கும் பாசன மேலாண்மை செய்வது பற்றி பொது விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அடிப்படைத் தகவல்கள் அளித்து நீரைப்பற்றிய விற்பனர் ஆக்குவது போன்றவையாகும் என எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தலைமை விருந்தினராக தலைமையேற்று விழாவை தொட’கி வைத்தார். அவர் தனது தலைமையுரையில், நீர்த்துப்போகும் நீர் வளங்களை பற்றி கவலை தெரிவித்ததோடு பஞ்சாயத்து அளவிலான அலுவலக நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் அனைத்து துறைகளும் ஒரு’கிணைந்து செயல்பட வேண்டிய முக்கியத்துவம் பற்றி தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு தண்ணீர் கிராமம் தேர்வு செய்யப்பட்டு நீர் தேவைகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, நீர் தேவையை தன்நிறைவடைய செய்யப்படுவதாகும்.இந்த பயிற்சி முகாமிற்கு 25 மாவட்டத்திலிருந்து இரண்டு நீர் கிராமங்களின் பிரதிநிதிகள், முக்கியமாக கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் நீர் துறையில் வேலை பார்ப்பவர்கள் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்